பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

விலை ரூபா 5-00

வலம்புரி
VALAMPURI

பக்கங்கள் 08

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 11 ஞாயிற்றுக்கிழமை (27-08-2000) தொ. பேசி:- 3378 ஒலி: 25

உள்ளே →
க. பொ. த.
சாதாரணதர
மாணவருக்கான
தமிழ்மொழி பகுதி 1
விடைகள்

★ யாழ் மாவட்ட தேர்தல்களம் ★

# பத்து அரசியல் கட்சிகள் போட்டி
# ஆர்வம் குன்றிய நிலையில் மக்கள்

## கட்சித் தலைவர்கள் பாசறையில் தங்கி தேர்தல்வியூகம் அமைக்கின்றனர்!

(யாழ். அலுவலக நிருபர்)

பதினோராவது பாராளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் வேட்புமனுக்கள் தாக்கல் செய்வது நாளை ஆரம்பமாகவுள்ள தால் யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடவடிக்கைகளில் அரசியல் கட்சிகள் சுறுசுறுப்படைந்துள்ளன.

யாழ் மாவட்டத்தின் தேர்தல் களத்தில் சுமார் பத்து அரசியல் கட்சிகள் தமது வேட்பாளர்களை நிறுத்தவுள்ளது. இதற்காக இதுவரை காலமும் கொழும்பில் இருந்த கட்சித் தலைவர்கள் சிலர் அடுத்த சிலநாட்களுக்குள் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி, சுரேஷ் அணி) புளொட், ரெலோ, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், பொதுஜன ஐக்கிய முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், சுயேட்சைக்குழுக்கள் ஆகியன இம் முறை தேர்தல் களத்தில் குதிக்கவுள்ள கட்சிகளாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த அதன் உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, யாழ்.மாநகர சபை பிரதி மேயர் ரவிராஜ் ஆகி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட
## பொது ஜ. ஐ. முன்னணி பட்டியலில் பெண் ஒருவரும் போட்டியிடுகிறார்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

நேற்று இடம்பெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் மத்திய குழுக்கூட்டத்தில் வேட்பாளர் பட்டியல் ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வேல் முருகு தங்கராசா தலைமை வேட்பாளராகப் போட்டியிடுவதுடன் சின்னையா சிவஞானம், தேவ

[8 ஆம் பககம் பார்க்க]

## மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி வேட்பாளர்கள்

(மட்டக்களப்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் எம். பி. ஜோசப் பரராஜசிங்கம் தலைமையிலான வேட்பாளர் பட்டியலை, நேற்றுக் கூடிய மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெதுச்சபை ஏகமனதாக அங்கீகரித்துள்ளது.

தேர்தலில் போட்டியிடுவோர் விபரம் வருமாறு:

மட்டக்களப்பு தொகுதிக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் எம்.பி.யுமான ஜோசப் பரராஜசிங்கம், அலபோன்ஸ் மேரி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பி. செல்வராஜா, எம். விமலேஸ்வரன், சட்டத்தரணி சோமசுந்தரம் ஆகியோரும் கல்குடா தொகுதிக்கு பத்திரிகையாளர் எஸ். ஜெயானந்த மூர்த்தி, அதிபர் நிமலநாயம் சௌந்தரநாயகம், எம். உதயகுமார் ஆகியோர் போட்டியிட உள்ளனர்.

(வ-7)

## பௌஸி - அஷ்ரப் முறுகல் நிலை இன்று நேற்று ஏற்பட்ட ஒன்றல்ல
### அமைச்சர் எஸ். பி திஸநாயக்கா

(கொழும்பு)

அமைச்சர் பௌஸிக்கும் அஷ்ரப்பிற்கும் இடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலை இன்று நேற்று ஆரம்பித்ததல்ல. இது அவர்களுக்கு இடையே நீண்டகாலமாக இருந்து வந்த பிரச்சினையாகும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான எஸ்.பி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் பௌஸியை அமைச்சரவையில் இருந்தோ சுதந்திரக் கட்சியில்இருந்தோ வெளியேற்ற முடியாது என்றும், தற்போது எழுந்துள்ள பிரச்சினை அஷ்ரப்பிற்கும் பௌஸிக்கும் இடையே ஏற்பட்டுள்ள தனிப்பட்ட விடயமாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

(வ)

## தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ்

இடையே நீண்டகாலமாக இருந்து வந்த பிரச்சினையா

அமைச்சரவையில் இருந்தோ சுதந்திரக் கட்சியில்இருந்தோ

மாகும் என்று அவர் தெரிவித்துள்ளார். (வ)

# இலங்கை சிங்களவருக்கு மட்டும் சொந்தம் எனக் கருதுவது தவறு

## சபாநாயகர் இரட்நாயக்கா

(கொழும்பு)

இலங்கை சிங்கள மக்களுக்குமட்டுமே சொந்தமான நாடு என்று எவரும் நினைக்கக் கூடாது. தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் இந்த நாடு சொந்தமானது.

இவ்வாறு பாராளுமன்ற சபாநாயகர் கே.பி. இரட்னாயக்கா விளையாட்டுவிழா பரிசளிப்பின் போது குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 26வது தேசிய விளையாட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

(8 ஆம்பக்கம் பார்க்க)

# தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் பல இடங்களிலும் போட்டி

(கொழும்பு)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கொழும்பிலும் தனது வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை மட்டக்களப்பில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் கல்விமான்கள், சட்டத்தரணிகள், சமூகசேவையாளர்கள் போட்டி இடுவதற்கு முன்வந்திருப்பதாகவும், அவர்களது பெயர்

(8ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பிலிருந்து யாழ். வருவதில் தமிழ் கட்சிகளுக்கு பெரும்பாடாம்

(கொழும்பு)

தேர்தல் நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் வருவதற்கு போக்குவரத்து சீர் கேட்டினால் பலவிதமான கஸ்டங்களை அனுபவிக்க வேண்டியிருப்பதாக தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருவதிலுள்ள கஸ்டநிலமைகள் தொடர்பாக தமிழ்க் கட்சித் தலை

(8ஆம் பக்கம் பார்க்க)

# சுபத்திரன் தலைமையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். போட்டி

## வரதரும் பட்டியலில் இடம்பெறுவார்

(யாழ்ப்பாணம்)

நடைபெற இருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) யாழ்ப்பாணம், வன்னி ஆகிய மாவட்டங்களில் சுயேட்சையாகவும், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடும்என நேற்று இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அ.வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் த.சுபத்திரனும், வன்னியில் தலைமை வேட்பாளராக

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி- அஸ்ரப் இன்று சந்திப்பு முறுகல் நிலை முடிவுக்கு வரும்?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா மூஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம் அஸ்ரப் இன்று மக்காவிலிருந்து நாடுதிரும்பியதும் ஜனாதிபதிசந்திரிகாபண்டாரநாயக்கா குமாரதுங்கவுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு முஸ்லிம் காங்கிரஸ் முறுகல் தொடர்பாக பேச்சு நடத்தியுள்ளார் என்று அரசு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

போக்குவரத்து நெடுஞ்

(8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறுவிளம்பரம்

### தேவை

புதிதாக ஆரம்பித்த ஐஸ் கிறீம்கம்பனிக்கு கிறீம் மேக்கர், மற்றும் சைக்கிள் வியாபாரிகள், தேவை. தொடர்பு முகவரி: ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம் • கந்தசுவாமி கோவில் வடக்கு வீதி நீர்வேலி தெற்கு. [1666]

### விற்பனைக்கு

நாவலடி திருநெல்வேலி என்ற முகவரியில் அமைந்துள்ள 2 பரப்புக் காணியும் அதனுள் அமைந்த வீடும் விற்பனைக்குண்டு. தொடர்புகளிற்கு ச.குணேந்திரன் 400, கோவில் வீதி நல்லூர் வடக்கு. [இ.752]

## திருடர் கைவரிசை

சுதுமலை அம்மன் கோயில் பகுதியிலுள்ள வீடொன்றில் அண்மையில் பெறுமதியான எருது ஒன்றும், பல ரூபா பெறுமதியான பொருட்களும் திருடர்களால் களவாடப் பட்டுள்ளன.

அண்மையில் இடம் பெற்ற யுத்த அனர்த்தங்களினால் தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த பல மக்கள் இப்பகுதிகளிலே தங்கியுள்ளனர்.

ஆனால் சமீப காலங்களில் அதிகரித்து வரும் திருட்டுத் தொல்லைகளால் இப்பகுதி மக்கள் வேறு இடங்கள் தேடி குடியமர அலைந்து திரிகின்றனர். (த-49)

## பொது இடங்களில் துண்டுப்பிரசுரம் விநியோகிப்பதற்கு தடை

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு பிரசாரத்தில் ஈடுபடும் அரசியல் கட்சிகள் சுவரொட்டிகள், பதாதைகள் கட்சியின் உருவப்படம் தாங்கிய விளம்பரப் பலகைகள் மற்றும் சர்ச்சைக்குரிய துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றைப் பொது இடங்களில் வெளியிடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு அரசியல் கட்சிகளிடம் கேட்டுள்ளார்.

இந்த உத்தரவை மீறி செயற்படும் அரசியல் கட்சிகளின் அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டு பிணையில் செல்லமுடியாதவாறு தடுத்து வைக்கப்படுவர் எனவும் தெரிவித்துள்ளார். [ந-7]

## சங்கீதப் பரீட்சை

(நல்லூர்)

வட - இலங்கைச் சங்கீத சபையின், 2000 ஆம் ஆண்டுக்கான சங்கீதப் பரீட்சைத் தொடரில் அறிமுறைப் பரீட்சை அடுத்தமாதம் 2 ஆம், 3 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக, அறிவிக்கப் பட்டுள்ளது. (க-103)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஆகஸ்ட் மாதம் 25-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகின்றது.

சங்கானை

| | |
|---|---|
| 148298 ஏ | 148298 பி |
| 150747 ஏ | 152137 ஏ |
| 152138 ஏ | |

நல்லூர்

| | |
|---|---|
| 138436 ஏ | 151967 ஏ |
| 151967 பி | 152087 ஏ |
| 152087 பி | 155197 ஏ |
| 155307 ஏ | 155307 பி |

சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 146394 ஏ | 146394 பி |
| 150597 ஏ | 150597 பி |
| 150597 சி | 150597 டி |
| 151798 ஏ | 152235 ஏ |
| 153340 ஏ | 153341 ஏ |
| 155232 ஏ | 155232 பி |
| 159144 ஏ | |

தெல்லிப்பழை

| | |
|---|---|
| 150581 ஏ | 150538 ஏ |
| 152085 ஏ | 162085 பி |
| 155140 ஏ | 155140 பி |
| 155140 சி | 155140 டி |

உடுவில்

| | |
|---|---|
| 123353 ஏ | 123353 பி |
| 123353 சி | 123353 டி |
| 151879 ஏ | 151879 பி |
| 151879 சி | 151879 டி |
| 152012 ஏ | 152012 பி |
| 152200 ஏ | 152200 பி |
| 152200 சி | 152214 ஏ |
| 152236 ஏ | 152236 பி |
| 152237 ஏ | 155191 ஏ |
| 155191 பி | 156341 ஏ |
| 155341 பி | |

ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

சங்கானை

| | |
|---|---|
| 151785 ஏ | 151785 பி |
| 151785 சி | |

கோப்பாய்

| | |
|---|---|
| 154305 ஏ | 154305 பி |
| 154305 சி | 154306 ஏ |
| 154306 பி | 154310 ஏ |
| 154310 பி | 154310 சி |
| 154344 ஏ | 154344 பி |
| 154413 ஏ | 154413 பி |
| 156697 ஏ | 157491 ஏ |
| 157491 பி | 157491 சி |

நல்லூர்

| | |
|---|---|
| 143366 ஏ | 144872 ஏ |
| 144872 பி | 144872 சி |
| 144873 ஏ | 144873 பி |
| 144946 ஏ | 144955 ஏ |
| 144955 பி | 145179 ஏ |
| 145179 பி | 145179 சி |
| 145179 டி | 145673 ஏ |
| 156709 ஏ | 156853 ஏ |
| 150680 ஏ | 152057 சி |
| 152075 ஏ | 151075 பி |
| 152147 ஏ | 152147 பி |
| 155157 ஏ | 155157 பி |

சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 151972 ஏ | 151972 பி |
| 151972 சி | 151972 டி |
| 153309 ஏ | 153309 பி |
| 153309 சி | 153309 டி |

தெல்லிப்பழை

| | |
|---|---|
| 150545 ஏ | 150546 ஏ |
| 150546 பி | 155117 ஏ |
| 155117 பி | 155154 ஏ |

உடுவில்

| | |
|---|---|
| 145223 | 145223 ஏ |
| 151863 ஏ | 151863 பி |
| 151863 சி | 151863 டி |
| 151863 ஈ | 151863எவ் |
| 151981 ஏ | 151981 பி |
| 152005 ஏ | 152119 ஏ |
| 152174 ஏ | 152174 பி |
| 153451 ஏ | 153451 பி |
| 155287 ஏ | 155288 ஏ |

(சு)



# JCIT

## Obtain Open University Exemptions with our Diplomas!

**The following courses will commence in early September.**

### Computer Courses:

1. Advanced Diploma in Computer Programming & Data Processing
   Contains Excel 2000, Visual Basic (6.0), C.
   (One - year full time)
2. Diploma in Computer Programming & Data Processing
   Contains Excel 2000 Visual Basic (6.0), Pascal, Access 2000
   (One - year full time) Fees: 4000/-
   (Syllabus covers curriculum for NCCA examinations)
3. Certificate course in business applications (Morning & Evening)
   - ★ MS Word 2000
   - ★ MS Excel 2000
   - ★ MS Access 2000
   - ★ Power Point
   - ★ Bascal
   - ★ Visual Basic
   - ★ FoxPro
   - ★ C/C++

   (3 Months) Fees: 1000/- each
4. Australian Computer Society Examinations (all 4 parts) — (ACS)
   (6 Months) Fees: 2000/-
5. British Computer Society Examinations - (BCS) Fees Rs. 1500/- each module
   - ★ Certificate level
   - ★ Diploma level
6. Bachelor of Information Technology — (BIT)

### Technical Courses

7. Craft Courses (will include basic introduction to computers)
   (தமிழ் மொழி மூலம்)
   Draftsmanship Practice — (Fees: Rs. 1450/-)

## St. John's College, Jaffna.
## Chundikuli Girls' College, Jaffna.
## ADMISSION-2001

1. பின்வரும் வகுப்புக்களில் வெற்றிடங்கள் உள.
   தரம் 1, தரம் 6.
2. (அ) விண்ணப்பப்படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 01-09-2000 முதல் 15-09-2000 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   (ஆ) எக்காரணம் கொண்டும் 15-09-2000 க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்

7. Craft Courses (will include basic introduction to computers)
(தமிழ் மொழி மூலம்)

- ☐ Mechanical Draftsmanship Practice — (Fees: Rs. 1450/-)
- ☐ Electrical Wiring & Installation Practice — (Fees: Rs. 1450/-)
- ☐ Automobile Technology (Basic Car Driving will be taught) (Fees: Rs. 1450/-)
- ☐ Radio & T. V. Servicing — (Fees: Rs. 1500/-)

8. Technician Certificate Course in

- ☐ Basic Engineering (Covers all disciplines of Engineering) - 18 months Fees: Rs. 4500/-
- ☐ Electrical & Telecommunications — 1 year - (Fees; Rs. 3000/-)
- ☐ Civil Draftsmanship — 1 year — (Fees: Rs. 1250/-)

9. Diploma in Electronics & Telecommunications - 3 years - (Fees Rs. 4575/

I Enough Practical Classes given

II Facilities Library, Sports & Hostel

III Collect application forms at J. C. I. T. or Jaffna College Undergraduate Department, Hospital Road, Jaffna.

iv Submit your applications directly or by post.

v Registration on September 4th at 10-30 a. m.

**Director,**

**Jaffna College Institute of Technology**

**Vaddukoddai.**

(C - 738)

2. (அ) ... களிலிருந்து 01-09-2000 முதல் 15-09-2000 வரை பெற்றுக் கொள்ளலாம்.
(ஆ) எக்காரணம் கொண்டும் 15-09-2000 க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படா.
(இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
(ஈ) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 21-09-2000 அத்திகதிக்குப் பின் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

4. தரம் ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரற் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.

5. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை அவ்வக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

6. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 250/-

7. வயதெல்லைகள்:
(அ) தரம் ஒன்று: விண்ணப்பதாரி 1-2-1995க்கும், 31-1-1996க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
(ஆ) தரம் ஆறு: விண்ணப்பதாரி 1-2-1990இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

8. பிரவேசப் பரீட்சை: தரம் ஆறு வகுப்புக்கு 30 - 9 - 2000 காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

9. ஏனைய வகுப்புக்கான விண்ணப்பங்களையும் காரியாலயத்தில் இதே நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சை மார்கழியில் நடாத்தப்படும். விபரங்கள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

[கி/726]

அதிபர்கள்

# பேச்சுவார்த்தையே பிரச்சினையின் தீர்விற்கு உண்மையான; உருப்படியான திறவுகோல்

இலங்கையில் குறிப்பாக வடக்குக்கிழக்கைத் தலைநகரமாகக் கொண்டு வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் எத்தகைய துன்ப துயரங்களை அனுபவிக்கப் போகின்றார்கள் என்பதை நான்கு தசாப்தங்களுக்கு முன்பேதீர்க்க தரிசனமாகக்கூறிய திருமலை தந்த சுடர் விளக்கு அமரர்என் ஆர் இராஜவரோதயம் அவர்களின் நினைவு தினம் இன்றாகும். அதனை ஒட்டி 1956 ம் ஆண்டு வைகாசித்திங்கள் 5 ஆம் நாள் வவுனியாவில் நடைபெற்றதமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாட்டில்அவர் ஆற்றியஉரையின் பிரதான அம்சங்கள்இங்குபிரசுரமாகிறது.

எந்தஒரு அரசியல் போராட்டமும் நாட்டில் ஓரளவு குழப்பத்தையும், மக்களின் அன்றாட வாழ்க்கையில் சற்றுத் தடுமாற்றத்தையும் விளைவிக்கத்தான் செய்யும். பற்பல கஷ்ட நஷ்டங்கள் மக்களுக்கு ஏற்படவுங்கூடும். இப்படியான ஒரு சீர்கேட்டை ஏற்படுத்துவதில், பொறுப்பு வாய்ந்த எந்த ஒரு அரசியல் கட்சியும் மகிழ்ச்சியடைய முடியாது. போராட்டத்தைக் கூடுமான வரை தடுக்க முடியுமானால் மக்கள் நலனில் நாட்டமுள்ள எந்த அரசியல் கட்சியும் அப்படித்தான் செய்ய முற்படும்.

ஆனால் தே சமயத்தில் நாம இன்னொருஉண்மையை மறந்துவிடலாகாது. ஒரு அரசியல் கட்சி எந்த மக்கள் சமுதாயத்தின் ஜீவாதார உரிமைகள் யாவும் அபகரிக்கப்பட்டு, அந்தச் சமுதாயத்தையே பூண்டோடு அழித்து விடுவதாக பகிரங்கச் சவால் விடப்படும் போது - அதை எதிர்த்துப் போரிடாமல், செயலற்றுச் சோம்பி கிடப்பதனால் அந்த அரசியல் கட்சி இருப்பதைவிட- அழிந்தொழிவது மேலானது.

எந்தச் சிக்கலான பிரச்சினையும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம், நட்புறவான கலந்துரையாடல்கள மூலம்தீர்த்து வைக்கலாம் என்பதில்-நமது கட்சி அன்றும், இன்றும் நம்பிக்கை கொண்டதாகத்தானிருக்கிறது. மக்களுக்கும் மக்களுக்கும்இடையிலாயினும் சரி மக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலாயினும் ஏற்படும தகராறுகளையும், பேதங்களையும் கூட-இந்த வழியில் தீர்த்து வைக்கலாம் என்பதில் சந்தேகம் இல்லை. சமாதானப் பேச்சு வார்த்தை என்ற வழியைக் கடைப் பிடித்து,கௌரவமான முறையில் பிரச்சினையை தீர்க்க முடியுமானால் அந்த வழியையே முதலில் நாட வேண்டும்.

அந்தச் சமாதானவழிபயன் தரவில்லை என்று கண்டால் தான்-நேரடி நடவடிக்கை, சத்தியாக் கிரகம் போன்ற இதர வழிகளைக் கையாள வேண்டும். இந்த நம்பிக்கையில் நமக்கு உள்ள பற்றுதலின் காரணமாகவே,1956ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நாம் நிறைவேற்றிய திருமலைத் தீர்மானத்தில் காணப்பட்ட கோரிக்கைகளைப் பெறுவதற்கு ஓராண்டு எல்லை குறிப்பிட்டோம்.

திருமலைத் தீர்மானத்தின் பிரகாரம் நாங்கள் 1957 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் திகதி நமது சத்தியாக்கிரக சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பித்திருக்க வேண்டும். ஆயினும் சமாதான மார்க்கத்தில் நமக்கு உள்ள குன்றாத பற்றும் குலையாத நம்பிக்கையுமே கடந்த ஆண்டு இதே காலத்தில் எங்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதில் பிரதமர் காட்டிய ஆவலை நாம் ஏற்றுக் கொள்ளும் படி செய்தன.

### உடன் படிக்கை ஒரு எடுத்துக்காட்டு

பேச்சு வார்த்தைகள் ஒரு சமாதான உடன்படிக்கையில் முடிவுற்றன. அந்த உடன் படிக்கையின் வாசகங்கள் என்னவென்பதை அது மட்டுமல்ல, அந்த உடன் படிக்கையை எவ்வளவு வெட்ககேடான முறையில் ஒரு தலைப்பட்சமாக அரசாங்கம். நிராகரித்தது என்பதும் தெரிந்ததே.

பிரஸ்தாப உடன்படிக்கை எங்களுடைய அபிலாஷைகளையெல்லாம் முற்றாகத் திருப்திப் படுவதில்லை. ஓர் இடைக்கால ஏற்பாடாகவே அந்த உடன்படிக்கையை நாம் மதித்தோம். ஆயினும், கௌரவம் குன்றாத பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினையை தீர்ப்பதில் எங்களுக்குள்ள ஆர்வத்துக்கும், விருப்பத்துக்கும அந்த உடன் படிக்கை ஒரு சின்னமாக விளங்கியது எனலாம். நாட்டில் குழப்பமும், கலவரமும் இல்லாத முறையில் எந்தப் பிரச்சினையும் தீர்ப்பதற்கு மார்க்கமுண்டானால் அதற்கு நாம் மாறுபட்டவர்கள் அல்லர் என்பதற்கு மேற்படி சம்பவம் ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

இலங்கைக்குச்சமஷ்டிஆட்சி முறை வேண்டுமென்பதை நாம் நமது கட்சியின் இலட்சியமாகக் கொண்டதற்கு உரிய முக்கிய காரணங்களில் இதுவும்ஒன்று. நாட்டின்ஒருபகுதி- தமிழர் பெரும்பான்மைப் பகுதியாகவும்,மற்றப்பகுதி— சிங்களவர்பெரும்பான்மைப்பகுதியாகவும் இருக்கிறது ஆனால் இரண்டிலும குறிப்பிடத்தக்க தொகையினர் இடம் மாறிச் சென்று குடியேறியிருக்கிறார்கள். இந்த நிலைமையில்தான் இன்றைய இலங்கை அமைந்திருக்கிறது. இந்த அமைப்பை மாற்றித் தமிழர்களைச் சிங்களப் பிரதேசங்களிலிருந்து விரட்டிக் கலைத்துவிட்ட பின்னும்,நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும் என்று பேசுவதெல்லாம் வெறும்பகட்டுப் பேச்சேயல்லவா?

இன்றுள்ள இலங்கையில், சிங்கள வகுப்பு வாதசக்திகள் –தேசியம், தேசாபிமானம் என்ற போர்வைக்குள் தமிழ் மக்களைச் சிங்களப்பிரதேசங்களிலிருந்து அடித்துத்துரத்தி, விரட்டி விட முயற்சித்து வருகின்றன. பெரும் பான்மை மக்கள் தமிழ் மக்களை அடக்கியொடுக்குவதைத் திரை போட்டுமறைப்பதற்காகவே- 'ஒற்றுமை' 'ஐக்கியம்' என்றெல்லாம் வெளி வேஷக் கூச்சல் போடுகிறார்கள். அரசாங்கமும் ஆட்சியிலுள்ள கட்சியும் சிங்கள வகுப்பு வெறியர்களைத் தூண்டிவிடுகிறார்கள்: அல்லது இவர்கள் விஷயத்தில் கண்டும் காணாதவர் போல் பாவனைசெய்துவருகிறார்கள்

### பிரிவினை

இந்தச் சூழ் நிலையில் நாடு அரசியல் ரீதியாக இரண்டாகப் பிரியவேண்டியது தவிர்க்க முடியாததாகும் இப்படி எண்ணுபவர்களும், நம்பிக்கை கொண்டுள்ளவர்களும் தமிழ் பேசும்மக்களிடையே இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை நான் அறிவேன். அப்படிப்பட்டவர்களுடை பிரிவினைக் கோரிக்கை ஆதாரபூர்வமானதா-அல்லவா? என்பதைக் கவனித்து, காலங் கடந்து விட முன்னர் பிழைகளைச் சரிப்படுத்தி, ஆவண செய்ய வேண்டிய கடமை ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களைச் சார்ந்ததாகும். பெரும்பான்மை மக்களுடைய அதி தீவிர வகுப்புவாதம்- இந்தியாவில் பாகிஸ்தான் என்று ஒருதனி நாடுஉதயமாவதற்கு எப்படிக் காலாயிருந்ததுஎன்பதை ஆட்சியாளர் மறந்துவிடக்கூடாது.

★ திருமலையூரான் ★

---

## மட்டக்களப்பு காங்கேயன் ஓடை கிரனேட் வீச்சு சம்பவம் மரண விசாரணைகள் தொடர்கின்றன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காங்கேயன் ஓடையில் கடந்த வெள்ளி மாலை இடம் பெற்ற இராணுவ சிப்பாயின் கிரனேட் வெடித்த சம்பவத்தில் பலியானவர்களின் மரண விசாரணை மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி கே. விஸ்வநாதன் முன்நிலையில் நடத்தப்பட்டது.

மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்த சுமையா (வயது 12), இஸ்மாயில் ஸாமிலா (வயது 12), பாத்தும்மா (வயது 40) அலிஸார் (வயது 55), கபூர்கஸஉட் (வயது 17), மொஹமட் தம்பி (வயது 30) ஆகியோர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகின்றனர்

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் காத்தான்குடி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டனர்.

இச்சம்பவத்தில் கிரனேட்டை வைத்திருந்த இராணுவசிப்பாய் மதுபோதையில் இருந்ததாக அப்பகுதி வாசிகள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சம்பவத்தில் இராணுவச் சிப்பாயும் எட்டு வயது சிறுவன் உட்பட மூவர் ஸ்தலத்திலேயே பலியானது ஏற்கனவே தெரிந்ததே.(60)

---

## தவறாது சமுகம் தரவும்

க.பொ.த (உ/த) பரீட்சை இரண்டாம் கட்ட மதிப்பீட்டாளர்களை கொழும்புக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆகையினால் இவர்கள் 2000.08.28 ம் திகதி காலை எட்டு மணிக்குப் பிந்தாமல் யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலைக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

வலயக் கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

[கி-741]

---

## தபால்மூல வாக்களிப்பில் படையினர் கூடுதல் ஆர்வம்

(மட்டக்களப்பு)

மாவட்ட செயலகத்தில் படையினரும்,பொலிஸாரும்தபால் மூலம் வாக்களிப்பதற்காக வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களைத் தேடும் நடவடிக்கைளை அவதானிக்க முடிந்துள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 2769 பேர் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்திருந்து, 2409பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றார்கள் இம்முறைபாராளுமன்றத்தேர்தலில் அதனை விட கூடுதலான விண்ணப்பங்கள் கிடைக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்து.

இதேவேளையில் தபால் மூலமாக வாக்களிப்பதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் பலர் விண்ணப்பித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சு-60)

---

## சம்பளம் வழங்கப்படவில்லை

(தென்மராட்சி)

கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றுகின்ற 35 ஊழியர்களுக்கு மே, ஜூன், ஜூலை மாதங்களுக்கான சம்பளம் இது வரை வழங்கப்படவில்லை என சங்கத்தின் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்த நிலையில் உள்ள பெரும்பாலான பணியாளர்கள் சம்பளம் கிடைக்காமையினால் பெரிதும் கஷ்டப் படுவதாகவும் அறியப் படுகின்றது.

இச்சங்கத்தின் நான்கு விற்பனை நிலையங்கள் மட்டும் தற்போது இயங்கிவருவதாகவும், அவற்றில் கள்விற்பனை மிகவும் மந்த கதியிலேயே மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

சங்கத்தில் போதிய நிதியின்மை காரணமாகவே ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக சங்க நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப் படுகின்றது. (த-77)

---

## கோளறு பதிகம் ஓதல்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் வேண்டிதினமும் 1. 15 மணிமுதல்2. 00 மணி வரை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் கோளறு பதிகம் ஓதப்பட்டுவருகிறது.

பஜனை கலாபூஷணம் பே. சந்திர சேகரம் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது; [●]

---

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தாச்சிச் சங்க அனுசரணையுடன் இணுவில் சிந்து விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டி சிந்து விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது;

இன்றைய தினம் தென்றல் விளையாட்டுக் கழகமும் பூமகள் விளையாட்டுக் கழகமும், நாளை சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகமும், அறிஞர் விளையாட்டுக் கழகமும், நாளை மறுதினம் வராகி விளையாட்டுக் கழகமும், வசந்தமதி விளையாட்டுக் கழகமும் எதிர் வரும் 30ஆம் திகதி மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் பாடுமீன் விளையாட்டுக் கழகமும் இப் போட்டியில் கலந்துகொள்கின்றன:

(வ-2)

---

## ஆதாரம் காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பீச்றோட்டைச் சேர்ந்த விக்னராசா மதன் என்பவருடைய பாதுகாப்புடனான தங்குமிடத்திற்கும் புனர்வாழ்விற்குமான நிலையத்தினால்வழங்கப்படும் புகைப்படத்துடன் கூடிய சான்றிதழ் பத்திரம் கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## இராசி பலன்

27-8-2000
(ஆவணி 11 ஞாயிறு)
திரயோதசி
மு. இ 9. 00 வரை
பூசம்
மு.இ9.26 வரை
பிரதோஷ விரதம்

**மேடம்**
மகிழ்ச்சியான சம்பவம், தொழிலாளர் நம்பிக்கைக் குறை, உஷ்ணரோகம்

**இடபம்**
பணவரவு, சகோதரர் உறவு, தூரதேசச் செய்தி, சென்ற காரியம் சிறப்பு

**மிதுனம்**
வாக்குவாதம், காரிய நட்டம், சுப நிகழ்வு, தலையிடி

**கடகம்**
உடல் நலம், தடுமாற்றம், மனக்கவலை

**சிங்கம்**
காரியத்தாமதம், துயரச் செய்தி, பணச் செலவு பிரயாணம்

**கன்னி**
பொருள் வரவு, தொழில் முயற்சி விருத்தி, குடும்பசுகம், புகழ் கேட்டல்

**துலாம்**
தொழில் மேன்மை, புகழ் குறைதல், பணச் செலவு, பிரயாணம்

**விருச்சிகம்**
மனப் பயம், இடமாற்றம், காரிய வெற்றி, தந்தைவழி உறவு

**தனு**
வீண் அலைச்சல், மனஸ்தாபம், நன்மை விருத்தி, புதிய முதலீடு

**மகரம்**
திருமணப் பேச்சு, உல்லாசம், விருந்துண்ணல், பொருள் வரவு

**கும்பம்**
புதிய முயற்சி, குடும்பத்தில், சுப நிகழ்வு, சென்ற இடத்தில் செல்வாக்கு, மனக்கலக்கம்

**மீனம்**
குடும்பக் கவலை, சிறு ரோகம், காரிய அனுகூலம், தொய்வு சிந்தனை

[பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது]

வளவன்

# இந்துசமய கலாசாரத்திற்கு தனியான அமைச்சு வேண்டும்

## சர்வதேச இந்துமதகுரு பீடம் கோரிக்கை

(கொழும்பு)

இந்து சமய கலாசாரத்தைப் பேணுவதற்குத் தனியான அமைச்சு ஒன்றை உருவாக்க வேண்டுமென சர்வதேச இந்துமத குரு பீடம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச இந்துமத குரு பீடத்தின் தலைவர் சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் விடுத்த வேண்டுகோளில்,

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் பௌத்த, இந்து, இஸ்லாம் சமயங்களுக்குத் தனித்தனியான அமைச்சு இருந்தது.

ஆனால் தங்கள் அரசாங்கத்தில் பௌத்த மதத்திற்கு மட்டும் பௌத்த சாசன அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய செயற்பாடுகள் ஏனைய மதங்களுக்கு உரிய மதிப்பை வழங்க அரசு மறுப்பதையேசுட்டிக் காட்டுகிறது.

இலங்கைத் திருநாடு பௌத்தம், இந்து, இஸ்லாமியம் கிறிஸ்தவம் ஆகிய நான்கு மதங்களைக் கொண்டது என்பதைத் தாங்கள் மறக்க மாட்டீர்கள் என நம்புகிறோம்.

எனவே இனிவரும் காலங்களில் இருந்து சமய கலாசாரத்திற்கென தனியான அமைச்சு ஒன்றை உருவாக்க வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது. (ந)

# 5 கட்சிகளின் விண்ணப்பங்கள் ஆணையாளரினால் நிராகரிப்பு

(கொழும்பு)

எதிர் வரும் பொதுத் தேர்தலில் பங்குபற்ற பதிவுசெய்த 10 அரசியல் கட்சிகளில் 5 அரசியல் கட்சிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ருகுணுலங்கா மக்கள் கட்சி, ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி, தேசிய அபிவிருத்தி முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் அங்கீகரிக்கப்பட்டும் ஏனைய இரு கட்சிகள் எதிர் வரும் திங்கட்கிழமை முடிவு செய்யப்படும் என உதவித் தேர்தல் ஆணையாளர் ரகுபேரித் தெரிவித்துள்ளார்.

இதே வேளை தமது தேர்தல் நிலையங்களில் வாக்களிக்க அஞ்சுபவர்கள் வேறு வாக்களிப்பு நிலையங்களில் தமது வாக்குகளை அளிப்பதற்கு விண்ணப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார். (வ)

# ஈ.பி.டி.பி. பிரமுகர்-இராணுவ அதிகாரி சந்திப்பு இடம் பெற்றது

## கடற்றொழிலாளர் பற்றியும் ஆராய்வு

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரும் ஈ.பி.டி.பி அமைப்பின் பிரதி அமைப்பாளருமான ந. மதனராசா (மனோ) விற்கும் கட்டளை அதிகாரி வியனகேக்குக்கும் இடையே முக்கிய சந்திப்பு ஒன்று அண்மையில் இடம் பெற்றது.

இச்சந்திப்பின் போது கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சந்திப்பின்போது வேலணைப் பிரதேச சபைத் தலைவர் கருணாகர குருமூர்த்தியும் உடனிருந்தார்.

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயம் சார்பாக சாதகமான பதிலையும் கடற்றொழிலாளர்களைப் பொறுத்தவரை மண்கும்பான் செட்டி புலம் மக்களை விடியற்காலை 3-½ மணிக்கே தொழிலுக்கு அனுமதிப்பதெனவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

படிப்படியாக ஏனைய மக்களையும் தொழில் புரிய வாயப்பளிப்பதாகவும் உறுதிமொழி அளிக்கப்பட்டது.

கடற்படை அதிகாரியைச் சந்தித்து நயினாதீவு கடற்றொழிலாளர் பகல் தொழிலைக் குறைந்த பட்சம் மாலை 4 ½ மணிவரை செய்ய அனுமதிக்க வேண்டுமெனவும் இவர் கோரிக்கை விடுத்ததாகவும் இக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-ந)

# இந்து ஆலயங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் துரிதகதியில்

(யாழ்ப்பாணம்)

இதுவரையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில்பதிவுசெய்யப்படாத இந்து ஆலயங்கள் மற்றும் இந்து நிறுவனங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

வட. பிராந்திய இந்துப் பேரவை இந்நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உரியபடிவங்களை மேற்படி பணிமனையில் பெற்று உரிய அதிகாரிகளின் அறிவுறுத்தலுடன் கொழும்பிலுள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில் இந்து ஆலயங்கள், மற்றும் பல்வேறு இடங்களில் செயற்படும் இந்து சமய நூலகங்கள் தாம் நூல்களை பெறும் படிவங்களையும், எழுத்தாளர்கள் தமது நூல்களை இந்துசமய கலாசார திணைக்களத்திற்கு அனுப்புவதற்கான படிவங்களையும் பெற்றுக் கொள்ளலாமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# மேலதிக இடர்கால கொடுப்பனவு கிடைப்பதற்கு வகை செய்யவும்

## லங்கா சீமெந்துக்கூட்டுஸ்தாபன ஊழியர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசினால் வழங்கப்படும் மேலதிக இடர்காலக் கொடுப்பனவான 600 ரூபாவையும், 98 ஆம் ஆண்டில் மீள் ஒழுங்கமைக்கப்பட்ட சம்பளத் தொகையையும் பெற்றுத் தருமாறு லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுமார் 150 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் நேற்று டக்ளஸ் தேவானந்தாவை நேரில் சந்தித்து இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இது குறித்து ஜனாதிபதியின் செயலாளர், திறைசேரித் தலைவர், லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் ஆகியோருடன் டக்ளஸ் தேவானந்தா தொடர்பு கொண்டு விளக்கியதாகவும்,

குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளை எதிர் வரும் முதலாம் திகதியிலிருந்து தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ந)

மட்டு. களுவன்கேணி

# உயர்வகுப்பு மாணவன்கொலை சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்

கடந்த 18 ஆம் திகதி களுவங்கேணியில் இடம்பெற்ற சுற்றிவளைப்புச் சம்பவமொன்றின் போது கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் மொறக் கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ண மிசன் உயர் வகுப்பு மாணவன் எம். விஜயதர்சனின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 3 இராணுவ வீரர்கள் ஏறாவூர் பொலிஸாரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட கொம்மாதுறை இராணுவ முகாமைச் சேர்ந்த சாஜன் சமன் பிறேமசிறி, மஞ்சுளாபத்மகுமார, சமிந்த புஸ்பகுமார ஆகியோர் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி ஏ.எல். அப்துல்கபூர் முன்னிலையில் கடந்த வெள்ளியன்று ஆஜர் செய்யப்பட்ட போது சந்தேக நபர்களை எதிர்வரும்6 ஆம் திகதி வரை இராணுவ பொலிஸ் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் அன்றைய தினம் நடைபெற உள்ள அடையாள அணிவகுப்பில் ஆஜர் செய்யுமாறும் பொலிஸாரை இவர் பணித்துள்ளார்.

மேற்படி மாணவனின் மரணம் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (சு-06)

# இந்து குருமார்க்கு விசேட அ.அட்டை பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டாம்

(கொழும்பு)

சகல இந்து குருமார்களுக்கும் அரச அங்கீகாரத்துடன் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவிருக்கின்றன.

சர்வதேச குருமார் ஒன்றியம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது.

எதிர்வரும் புதன்கிழமை இவ் விசேட அடையாள அட்டைகள் கொழும்பில் வைத்து வழங்கப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்து குருமார்க நு:5 ெரம்பர் மாதம் 30 ஆம் திகதி மேற்படி அடையாள அட்டைகள் வழங்கப்படும் என சர்வதேச குருமார் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இதேசமயம், கடந்த காலங்களில் பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாக இந்துகுருமாரெதிர்கொண்ட இன்னல்களைத் தவிர்க்கும் வகையில், அவர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய இவ் விசேட அட்டைகள் வழங்க அரசு அனுமதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## இலட்சார்ச்சனை

நெட்டிலிப்பாய், கோண்டாவில் அருள்மிகு பிள்ளையார் கோவில் வருடாந்த இலட்சார்ச்சனை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெற்று 11ம் நாள் 1008 சங்காபிஷேகத்துடன் நிறைவு பெறும். (உ)

ஏழு இந்திய மீனவர் உட்பட

# பன்னிரண்டு கைதிகள் மீண்டும் யாழ்.சிறைச்சாலைக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சிறைச்சாலையிலிருந்து பாதுகாப்பு கருதி திருகோணமலை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட கைதிகளில் ஒரு பகுதியினர் நேற்று முன் தினம் பருத்தித்துறைக்கு விசேட கப்பல் மூலம் அழைத்து வரப்பட்டார்கள்.

அழைத்துவரப்பட்ட 12 கைதிகளில் 7 இந்திய மீனவர்களும் அடங்குவர்.

இக்கைதிகளின் பெயர் விபரம் வருமாறு

செல்வராஜா

கந்தையா கமலநாதன்

வசந்தநாதன் ஜெபக்குமார்

ரட்ணசிங்கம் கமலகரன்

பெரியதம்பி குகானந்தன்

இந்திய மீனவர்களான

எசேக்கு மூத்து அழகேசன்

யேசுதாசன் இருதயராஜா

யேசுதாசன் திருவேந்திரம்

தோமஸ் மைக்கல் அன்ரனி

சுப்பிரமணியம் மாடசாமி

தோமஸ் இயேசு ஆரோக்கியசிப்சன்

சேவியர் நிக்லோஸ்

ஆகிய பன்னிரவரே யாழ் வந்து சேர்ந்துள்ளனர்.

மேலும்

சைமோன் அன்ரன் ராஜ்குமார்

சண்முகராஜா தர்மலிங்கம்

தவசிதவறூபன்

அன்ரன் அமலதாஸ் லோறன்ஸ்

அந்தோனிப்பிள்ளை ஸ்ரனிஸ்லொஸ்

அப்புத்துரை ஆனந்தகுமார்

இருஸ்ணன் விஜய குமார்

ஆகியோரையும் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவர ஏற்பாடாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

## நூல் வெளியீடு

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தினர், கர்நாடக சங்கீதம் அறிமுறை நூலினை வெளியிட்டுள்ளனர்.

இசைக்கலைமணி செல்வி. ஸ்ரீரங்கநாதன் கல்யாணி இந் நூலை ஆக்கியுள்ளார். 103

# தேர்தல் வன்முறைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

[கொழும்பு]

தேர்தல் வன்முறையில் ஈடுடும் எவருக்கெதிராகவும் கட்சி பேதமின்றி கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பொலிஸ் படையினர்க்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாத்தறைப் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்கா குமாரதுங்க மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார்.

கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வன்முறையைப் பிரயோகித்தோ, வாக்கு மோசடி செய்தோ பொதுத் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்னும் அவசியம் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு இல்லையாது எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் பேசுகையில் வன்முறையில் ஈடுபடுவோர் அல்லது அதற்குத் தூபமிடுவோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நாம் ஒரு போதுமே தயங்கக் கூடாது. இந்தத் தயக்கம் மேலும் பல மோசடிகளை உருவாக்கும்.

வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுவோர் எமது கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் கைதுசெய்து உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம் என்றார்.

அத்துடன், அண்மையில் இடம்பெற்ற தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களை பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து, ஐக்கிய தேசியகக் கட்சி விமர்சித்தமை தொடர்பாக தனது கண்டனத்தையும் வெளியிட்டார்.

இதேசமயம்,

தேர்தல்கால வன்முறைகளைத் தவிர்க்கும் வகையில் கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## இன்று ஒரு தகவல்

# விருந்தோம்பலும் இன்சொல் கூறலும் வஞ்சிக்கொடியார் பண்பு

ஒரு ஊரில் நாகப்பன் என்றும் ஏகப்பன் என்றும் இரு நண்பர்கள் இருந்தார்கள். அவர்கள் பெரியவர்களானதும் வெவ்வேறு தொழில்களில் இறங்கினார்கள். நாகப்பன் தன் சொந்த ஊரிலேயே தன் வயலில் விவசாயம் செய்து வந்தான். ஏகப்பன் வியாபாரம் செய்யப் பட்டணத்திற்குப் போனான் நாகப்பன் நன்கு உழைத்து சில வயல்களை வாங்கியதோடு தான் வசித்த சிறு வீட்டையும் பெரியதாகக் கட்டிக் கொண்டான். நல்லதொரு பெண்ணையும் அவன் மணந்து கொண்டு சுகமாக தன் வாழ் நாட்களைக் கழித்து வரலானான்.

வியாபாரம் செய்யப் பட்டணம் போன ஏகப்பனும் தன் தொழிலில் நல்ல முன்னேற்றம் கண்டான். பத்து வருடங்களுக்குப் பின் அவன் தன் ஊருக்கு வந்து தன் நண்பன் நாகப்பனைச் சந்திக்க அவனது வீட்டிற்குச் சென்றான். அவனது வீடு மாறி இருந்தது. அதனால் சற்று திகைத்தாலும் அதன் எதிரே இருந்த புளிய மரத்தால் அவன் அதுதான் நாகப்பனின் வீடாக இருக்கும் என்று தெரிந்துகொண்டான்.

நாகப்பன் வசதியாக வாழ்கிறான் எனக் கண்டு ஏகப்பன் மகிழ்ந்தவாறே அந்த வீட்டு வாசலில் அடி எடுத்து வைத்தான். அப்போது மூலையில் இருந்து ஒரு நாய் குரைத்துக் கொண்டு அவனை நோக்கி ஓடி வந்தது. நாய் குரைப்பது கேட்டு நாகப்பனின் மனைவி வள்ளியம்மை கதவைத் திறந்து அதனருகேயே நின்று கொண்டு நாயை தன்னருகே அழைத்துக் கொண்டு ஏகப்பனை நீங்கள் யார் என்று கேட்பது போலப் பார்த்தாள்.

ஏகப்பனும் ''இது நாகப்பனின் வீடு தானே'' என்று கேட்க வள்ளியம்மையும் 'ஆம்' என்பது போலத் தலையை ஆட்டினாள். ஏகப்பனும் ''அவர் வீட்டில் இருக்கிறாரா?'' என்றுகேட்க அவளும் ''இல்லை'' என்றாள். ஏகப்பன் ''எங்கே போயிருக்கிறார்?'' என்று கேட்க அவளும் 'தெரியாது' என்று சற்றுக் கடுப்புடன்கூறினாள். ஏகப்பனும் நானும் நாகப்பனும் இளம் வயது முதல் நண்பர்கள். பத்து வருடங்களுக்கு முன் வியாபாரம் செய்ய நான் இந்த ஊரை விட்டுப் பட்டணத்துக்குப் போய் விட்டேன். இப்போது அவனைப் பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன். என்றான். வள்ளியம்மை அது கேட்டு ஒன்றும் சொல்லவில்லை. வீட்டிற்குள் வரும்படி அழைக்கவும் இல்லை.

ஏகப்பன் கடும் வெய்யிலில் வந்ததால் களைத்துப் போயிருந்தான். முகத்தில் வியர்வைத் துளிகள் மின்னின ஆயினும் அவன் ''நீங்கள் நாகப்பனுக்கு என்ன உறவு?' என்று கேட்டான். அவளும் தான் அவனது மனைவி என்று கூறினாள். ஏகப்பனுக்கு ரொம்ப சந்தோஷம் ஒரே வெயிலாக இருக்கிறது. கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் கொடுக்கிறீர்களா? என்று கேட்டான்.

வள்ளியம்மை உள்ளே போய் ஒரு அலுமினியக் குவளையில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். அதில் குப்பை விழுந்தும் சற்று சூடாகவும் இருந்தது. ஏகப்பன் அதைக் கீழே கொட்டி விட்டு அம்மணீ! நான் இப்போதே போக வேண்டும் நாகப்பனைப் பார்க்க முடியாதது வருத்தமாக இருக்கிறது. அவன் வந்தால் நான் வந்து போனதாகச் சொல்லுங்கள். அவன் இப்படி வசதியாக வீடு கட்டிக் கொண்டு வாழ்வது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது என்று சொல்லுங்கள். ஆனால் இந்த வீட்டு நுழை வாசல் மட்டும் சரியாக இல்லை என்று நான் கூறியதாக கூறுங்கள்; ஏனென்றால் நான் மரவேலை செய்பவன். எனக்கு தலை வாசல் பற்றி எல்லாம் நன்கு தெரியும் என்றுகூறிவிட்டுச்சென்றான்.

அன்றிரவு வெகு நேரம் கழித்துத் தான் நாகப்பன் தன் வேலைகளை முடித்து விட்டு வந்தான். ஏகப்பன் தன்னைக் காண வீடு தேடி வந்தான் என்பது தெரிந்ததும் அவன் ''அடடா? அந்த சமயத்தில் நான் இங்கே இல்லாமல் போனேனே. நீயாவது அவனைப் போகவிடாமல் இங்கே இருக்கச் சொல்லி இருக்கலாமே, அது சரி அவன் ஏதாவது சொல்லி விட்டுப் போனானா? என்று கேட்டான். வள்ளியம்மையும் ''நீங்கள் இப்படி முன்னுக்கு வந்தது பற்றி சந்தோஷப்படுவதாகச் சொல்லச் சொன்னார். வீடு நன்றாக இருக்கிறது என்றும் நுழையும் தலை வாசல் மட்டும் சரியாக இல்லை என்றும் சொல்லி விட்டுப் போனார் என்றாள்.

சில நாட்கள் கழிந்தது. மீண்டும் ஏகப்பன் நண்பன் வீட்டிற்கு வந்தான் இம்முறை வள்ளியம்மை நன்கு உபசரித்தாள்.

போகும் போது 'இம்முறை இந்த நுழைவாயில் நன்றாகவுள்ளது என்று என் நண்பனிடம் சொல்லுங்கள். அவனை இம்முறையும் காண கிடைக்கவில்லை யென்பது தான் கவலை'' என்று கூறி விட்டுப் போனான்.

அவன் போய் கொஞ்ச நேரங் கழிந்து நாகப்பன் வந்ததும் அவன் மனைவி ஏகப்பன் பற்றி எல்லாம் சொன்னாள் ஆயினும் ''நுழைவாயில் பற்றி அவன் கூறியது தான் எனக்குப் புரியவில்லை'' என்றாள்.

நுழைவாயில் என்று என் நண்பன் குறிப்பிட்டது உன் விருந்தோம்பல் தன்மையைத் தான். போன முறை அவனுக்கு நீ செய்த வரவேற்பும் இம்முறை செய்த வரவேற்பும் வேறுபாடு இருந்திருக்க வேண்டும். அவன் அதனையே குறிப்பிட்டான் என்றான் நாகப்பன்.

இல்லறம் என்பது ஒரு நல்லறம். அதனை மனைதக்க மாண்புடையவளாக விளங்கும் பெண்ணே சிறக்கசெய்ய வேண்டும். அவள் கடமைகளில் மிகவும் முக்கியமானது விருந்தோம்பலும், இன்சொல் கூறி வரவேற்றலும் ஆகும்.

தென்கச்சி சுவாமிநாதன்

# நுவரெலியாவில் வீடுகள் எரிந்தன

(கொழும்பு)

நுவரெலியாவிலுள்ள பெருந்தோட்டப்பகுதியில்ஏற்பட்ட தீ விபத்தில் ஐந்து வீடுகள் எரிந்து நாசமாகியது.

இப்பகுதியிலுள்ள வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது ஏற்பட்ட மின்ஒழுக்கு காரணமாகவே இத் தீ அனர்த்தம் இடம்பெற்றதாகத் தெரிய வருகிறது. (ந-2)

## நல்லையில் சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய இந்துப் பேரவையின் நல்லைக் கந்தன் உற்சவ காலத் தெய்வீக நிகழ்ச்சிகள் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'ஆன்மீகத்தில் அரிவையர்' என்னும் பொருளில் சிவத்திரு அன்ன தாசன் க. ஆனந்தராஜா சொற்பொழிவாற்றவுள்ளார்

இந்நிகழ்வு அறுபத்துமூன்று நாயன்மார் மடத்தில் பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது (செ)

## தேர் உற்சவத்திற்கு தாக சாந்தி சேவை

(அரியாலை)

நல்லூர் ஸ்ரீதுர்க்காமணி மண்டப தாகசாந்தி நிலையத்தினர் தேர், தீர்த்த உற்சவங்களை முன்னிட்டு விஷேட தாகசாந்தி சேவையினை நடத்தவுள்ளனர்.

இதேவேளை இம் மண்டபத்தில் தினமும் நண்பகல் 12 மணிக்கு அடியார்களிற்கு அன்னதானம் வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (த-106)

## திருவுருவச் சிலை அன்பளிப்பு

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்துக்கு திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பக்கலைஞர் இராமசேது திருவுருவச் சிலைகளை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இவரால் ஆக்கப்பட்ட நடராஜப் பெருமானின் திருவுருவச்சிலையும், கோண்டாவில் கந்தையாச் சுவாமிகளான குடைச் சுவாமிகளின் சிலையுமே மேற்படி மடத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டவை ஆகும்.

இவற்றை குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளிடம் வழங்கினார். [த-103]

## சர்வோதய சிரமதான இயக்கம் உதவி

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட சர்வோதய சிரமதான இயக்கம் பலாலி, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் இருந்து சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் 224 குடும்பங்களுக்கு வாளிகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

மல்லாகம், மருதனார் மடம், இணுவில், அளவெட்டி தெற்கு, கந்தரோடை, சங்கானை மத்தி ஆகிய இடங்களிலுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் இக்குடும்பங்கள் தங்கியிருக்கின்றன என சர்வோதய நிறுவனத்தின் செயல் திட்டப் பணிப்பாளர் திரு. எஸ் வி. சங்கரப்பிள்ளை தெரிவித்துள்ளார். (த-77)

## கிராம சேவகரை நீதிமன்றம் பாராட்டியது

[யாழ்ப்பாணம்]

கோயில் திருவிழா ஒன்றை முன்னின்று நடத்தி முடித்த கிராம சேவகர் ஒருவரை யாழ். நீதி மன்றம் பாராட்டியுள்ளது.

வட்டு கிழக்கு துறட்டிப் பனை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் மகோற்சவத்தை சிறப்பான முறையில் நடத்தியமைக்காக ஜே/157 பகுதி கிராம சேவகர் க சிறிகரனையே யாழ் நீதிமன்றம் பாராட்டியுள்ளது.

மேற்படி தேவஸ்தானத்தின் திருப்பணிச் சபைக்கும், பரம்பரை உரிமையாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறினால் யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது; [ந-12]

## நல்லூரான் திருவடிக்கு - 23



## தமிழ்ச் சங்கத் தலைவா-அறியாயோ

நல்லூர்ப் பதியுறையும் முருகனுக்குத் திருவிழா
நாடிப் பணிபவர்க்கு நலமளிக்கும் பெருவிழா
பக்தியுடன் வணங்கு வோர்க்கு பதம் அளிக்கும் முருகா
பாதம் பணிந்து வணங்குகின்றோம் குறைதீராய்;

தமிழ் மக்கள் இம்மண்ணில் தாங்கும் துயரங்களை
தமிழ்ச் சங்கத் தலைவா நீ அறிந்திருத்தல் நன்றோ;
தாழ்வுற்ற எம்மக்கள் வாழ்வதனை வளமாக்கி
தடையற்ற வாழ்வதனை வழங்கிடப்பா முருகா;

கண. ஜீவகாருண்யம்

## ஆவணியில் முடிவு சொல்லு நல்லூரா!

நினைத்ததை சேர்க்கின்ற நிமலனே நல்லூரா!
நின்னருள் எந்தனுக்கு தேவையிங்கு நல்லூரா
உனைத் தினம் எண்ணியே வாழ்கின்றோம் நல்லூரா!
உரிமைபெற்று வாழ்ந்திட உதவிடு நல்லூரா!
வினைத்ததை வெட்டுகிறோமோ சொல்லிடு நல்லூரா!
விடிவிங்கே பூக்காதோ மண்ணிலே நல்லூரா!
அணைத்தெம்மை காத்திடு என்றுமே நல்லூரா!
ஆவணியிந்நாளில் முடிவொன்று சொல்லிடு நல்லூரா!

— தர்மினி —

## மயில் வந்த கோலன்

ஆதிசிவன் தந்த பாலன்-எந்தை
ஆறுமுகன் கந்த-வேலன்
ஜோதி மயில் வந்த கோலன்-சிவ
சுப்பிரமணியன் பவ காலன்
சிவ நாதனின் அனல்மேல் விழி
வழியாக வரும் ஒளியாகவே
கங்கை அனல் காற்றுத் தாங்கவும்-அந்த
வானமும் பூமியும் ஓங்கவும்
வடிவாகியே நடமாடியே
வலமே பெற விளையாடிய
நல்லூரில் அருள் தரவந்தவன்

கவிஞர்: செ. பரமநாதன்

## நல்லையில் தனித்திருக்க எண்ணமோ?

ஓடியோடியே ஒதுக்கிடம் தேடினர்.
உலகின் மூலை முடுக்கெலாம் ஒதுங்கினர்.
வீடிழந்து வீதியில் நிற்பதும்?
விதவிதமாயெம் முயிர்கள் போவதும்
கோடியாய்ப் பல துன்பங்கள் தாங்கியே
கொதித்த மனங்கள் கும்பிட எண்ணுமோ?
நாடியுன்னிடம் நண்ணுவாரின்றி நீ
நல்லையில் தனித்திருக்க எண்ணமோ?
போதும் போதுமிப் பூமிபட்டதும்.
புன்னகையோடு நீ வாளாவிருந்ததும்;
ஏது மறிகிலோம் ஏறுமயில்வாசா
எங்களுக் குனையன்றி வேறுயார்துணை?

செ. பவானி

## அலையும் இழிநிலை அழியும் அருள்தாராய்

பகலவனி னொளியை நிகர் முகமதனின் கருணைவழி
பனிரு விழி யாலருளைப்—பொழிவேலா
பரிவொடுன திருவிழியாற் பகரரிய துயரமளி
பவமதனி லுழனுமெனைப்—பார்க்கொணாதோ?
அகமதனி லுறையுமுனை யநுதினமும் பணியவரு
மடியர்குறை யறிதலுனக்—கரிதாமோ?
அவரடையு துயரமறப் பெறவரிய உனதருளை
அருளி—உன் தாமதமும்—முறைதானோ?
எமது இடர் களையவெள்ளை விடையிலமர்ந் ததிஉயர
எழிலுறுசப் பரமதனில்—வருவேலா
இதயமது குமுறவுள விடமவைக ளலையுமெம
திழிநிலைய தழியவுன—தருளைத்தாராய்
இகமதனிற் கலியுகம தனிலருளு வரதனென
இதமுடனு ரைக்குமொழி—யறியாயோ?
இகபரசென பாக்கியமது செகமதனிற் செறியவென
எழில் நல்லை நின்றருளு—கந்தவேளே

— முருகநேசன்

## நல்லூர்க்கந்தன் பாமாலை

சப்பரத்தி லேறிவருஞ் சண்முகனை நல்லூரில்
எப்பொழுதும் காண இயலாது—தப்பாது
பாசங் குறுகப் பரம் பொருளோடான்மாவும்
நேசமுனுங் காட்டியது காண்;

இறைமணி இ. இராசரத்தினம்

# "த காஸ்ட்" நீரில் மூழ்கியதற்கு குண்டு வெடிப்பு காரணமா?

## விசாரணைகள் ஆரம்பம்

(மொஸ்கோ)

ரஷ்ய அணுநீர்மூழ்கியான ''த காஸ்ட்'' நீரில் மூழ்கியமை தொடர்பாக புலன் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பான முழுமையான விசாரணைகள் நடாத்தப்படும் என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் முன்பு அறிவித்திருந்த போதிலும், கடற்படைத் தலைமையக வட்டாரங்களால் தற்போது இவ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இவ் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என முன்னர் கருதப்பட்டு வந்த போதிலும் விபத்துக்கான காரணம் அதுவல்லவென்பது தெட்டத் தெளிவாகியுள்ளது.

இதேவேளை அணு நீர்மூழ்கியில் வைக்கப்பட்டிருந்த குண்டொன்று வெடித்ததில் இவ் விபத்து நேர்ந்திருக்கலாம் என பரவலாக நம்பப்பட்டு வருகிறது.

நீர்மூழ்கிக் கப்பலின் முன்பாகம் சேதமடைந்திருப்பது இதனை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளது என்றும், இருப்பினும் நீர் மூழ்கிக் கப்பல் மீட்பு தொடர்பான உடன் நடவடிக்கைகள் எடுக்கத்தவறியதன் எதிரொலியாக மக்களிடையே ஏற்பட்டுள்ள அரசு தொடர்பான எதிர்ப்பு நிலையை சமாளிக்கும் ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாக இவ் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கலாம் என அரசியல் நோக்கர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர். (உ)

# தமிழ்நாட்டு சைவ ஆலய நிர்வாகம் தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும்

## காஞ்சிப் பீடாதிபதி கோரிக்கை

(சென்னை)

தனியார் மயம் மற்றும் தாராள மயம் என்ற கொள்கைகளைப் பின்பற்றி கோயில்களை முன்புபோல் தனியாரிடம் விடவேண்டும் என்று தமிழ் நாடு இந்து அறநிலைத்துறையிடம் காஞ்சி காமகோடி ஜெந்திசரஸ்வதி சுவாமிகள் கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காஞ்சியில் தமிழ் நாடு அர்ச்சகர்கள் மகாநாட்டில் பேசுகையில் அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் தெடார்கையில் தமிழ் நாட்டில் உள்ள கோயில்களை அர்ச்சகர்களிடமோ, அல்லது நிர்வாகத்தரிடமோ அல்லது சமயத் தலைவர்களிடமோ ஒப்படைக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை வருமானம் குறைந்த அர்ச்சகர்களுக்கு மாதாந்தச் சம்பளமாக அரசு 1500 ரூபாவைக் கொடுக்க முன்வர வேண்டும் என்ற தீர்மானமும் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. (து)

## பர்மா நாட்டின்

# எதிர்க்கட்சித் தலைவி தனது ஆதரவாளரை சந்திக்கதடை

(ரங்கூன்)

பர்மா நாட்டின் எதிர்க்கட்சித் தலைவி, தலைநகர் ரங்கூனை விட்டு வெளியே சென்று தனது ஆதரவாளர்களைச் சந்திக்க மேற்கொண்ட முயற்சி பொலிஸ் பிரிவினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து எதிர்க்கட்சித்தலைவி ஆங் சாங் சூச்சி அம்மையார், தனது எதிர்ப்பினை வெளிப்படுத்தும் வகையில் தடுத்து நிறுத்தப்பட்ட இடத்திலேயே காரில் அமர்ந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பர்மா நாட்டின் இராணுவ ஆட்சிக்கு எதிராகச் செயற்பட்டு வரும் ஆங் சாங் சூச்சி, தலைநகருக்கு வெளியே தனது ஆதரவாளர்களைச் சந்திக்கச் சென்றுகொண்டிருந்த வேளை தலைநகரில் இருந்து 30 கிலோமீற்றர் தொலைவில் இவரது கார் இடை மறிக்கப்பட்டு தலைநகர் திரும்பிச் செல்லுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இவருடன் கூடவே 20 வரையான ஆதரவாளர்களும் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

அம்மையாரின் பயண வழி மறிப்பு தொடர்பாக பர்மா அரசு வெளியிட்ட அறிக்கையில், அவரது சொந்தப் பாதுகாப்பு கருதியும், ஆயுதப் புரட்சியாளரால் ஏற்படும் ஆபத்தினைத் தவிர்க்கும்வகையிலுமே தடுத்து நிறுத்தியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ ஆட்சியாளரினால் தமது கட்சி ஆதரவாளர்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருவது வெளியே தெரிந்துவிடக்கூடும் எனும் அச்சம்காரணமாகவே எதிர்க்கட்சித் தலைவியை, ரங்கூனை விட்டு வெளியே செல்லவிடாது தடுத்திருப்பதாக எதிர்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேசமயம், கடந்த 2 ஆண்டுகளின் முன்பு எதிர்க்கட்சித்தலைவி தலை நகரை விட்டுவெளியேசெல்லமுயன்றபோது, பொலிஸார் இடைமறித்ததும், அதனை எதிர்க்கும் வகையில் அம்மையார் 12 தினங்கள் அதே இடத்தில் காரில் அமர்ந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## கன்னட நடிகர் ராஜ்குமார் விவகாரம்

# வீரப்பனை சந்திக்கச்சென்ற கோபால் திரும்பினார்; மீண்டும் நாளை புறப்பாடு

## 14 கைதிகளை விடுவிக்க தீர்மானம்

(புதுடில்லி)

கன்னட நடிகர் ராஜ்குமாரின் விடுதலை தொடர்பாக சந்தனமரக்கடத்தல் வீரப்பனுடன் பேச்சு நடத்த காட்டுக்குச் சென்ற நக்கீரன் ஆசிரியர் கோபால் நாடு திரும்பியுள்ளார்.

வீரப்பனிடமிருந்து ஓடியோ வீடியோ கசெற்றுகள் இரண்டினை இவர் பெற்று வந்ததாகக் கூறப்பட்ட போதிலும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயம் என்னவென்பது தொடர்ந்தும் இரகசியமாகவே உள்ளது.

இந்த நேரத்தில் கோபாலுடன் கலந்தாலோசித்த கர்நாடக தமிழக முதல்வர்கள் இரு முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளனர்.

வீரப்பனின் ஆதரவாளர்கள் எனக் கருதி எல்லைக்காவல் படையினரால் துன்புறுத்தல்களுக்கு ஆளான அப்பாவிக் கிராம மக்களுக்கு உதவும் வகையில் இரு மாநிலங்களும் தலா 5 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளன.

அத்துடன் மைசூர் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் 21 பேர் மீதான வழக்குகளும் எந்த விதமான முன் நிபந்தனையுமின்றி திங்கட் கிழமை வாபஸ்பெற தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரு மாநில முதல்வர்களின் மேற்படி தீர்மானங்கள் வீரப்பனின் தற்போதைய முக்கிய கோரிக்கைகள் இவைதான் என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்துள்ளன.

இருந்த போதிலும் இவர்களினால் நிறைவேற்றப்பட முடியாத மேலும் கோரிக்கைகளும் இருக்கிறனவா என்னும் கேள்வியும் நோக்கர்கள் மதியில் எழுந்துள்ளது.

நாளை மீண்டும் வீரப்பனைச் சந்திக்கச் செல்லும் கோபால் நடிகர் ராஜ்குமாரின் கடத்தல் நாடகம் முடிவுறும் வகையிலான சாதக பதில்களுடன் வருவாரானால் இச் சந்தேகங்களுக்கு சாகமான விடை கிடைத்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)




# கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை ஈராக் தயாரிப்பு

(பக்தாத்)

ஈராக்கில், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் தயாரிக்கப்படுவதாக ஜேர்மனிய உளவு அமைப்பொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வெடிப்பொருட்கள், உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்களை கண்டம் விட்டு கண்டம் காவிச்செல்லும் ஏவுகணைத் தயாரிப்பு நிலையத்தினைத் தாம் கண்டுபிடித்திருப்பதாக அவ் உளவுச் சேவை கூறியுள்ளது.

தலைநகர் பக்தாத்துக்கு அருகே அபாபீல் 100 என்ற குறுகிய தூர ஏவுகணைகளைத் தயாரிக்கும் நிலையத்திலேயே இவ் ஏவுகணைத் தயாரிப்புகளும் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# ராஜீவ் கொலை வழக்கு விசாரணை விரைவில் முடிவுக்கு வரும்

## எல். கே. அத்வானி தெரிவிப்பு

(புதுடில்லி)

முன்னாள் பிரதமமந்திரி ராஜீவ்காந்தி கொலைவழக்கு விரைவில் முடியுமென்று உள்துறை அமைச்சர் அத்வாணி அவர்கள் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு நியமித்த பன்முனைக் கண்காணிப்புக் குழுவினர் விசாரணை மேற் கொள்வார்களென்றும் உலக நாடுகளிலுள்ளபலதலைவர்கள் விசாரிக்கப்பட்டு வருகிறார்களென்றும் இந்த விசாரணை முடிந்ததும் ஒக்ரோபர் மாதத்தில் அறிக்கைவெளிவந்ததும் பூரண ஆய்வுசெய்யப்படுமென்றும் காங்ரஸ் கட்சி ஒருவரின் கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில் அத்வாணி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (து)

# இந்திய தேசியக் கொடியை ஒத்த ஆடை தயாரித்தவர் மீது வழக்குத் தாக்கல்

(புதுடில்லி)

இந்திய தேசியக் கொடியில் காணப்படும் வர்ணங்களைப் பயன்படுத்தி நவீன ஆடை தயாரிக்க முற்பட்ட ஆடைத் தயாரிப்பாளர் மீது தேசியக் கொடியை அவமதித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்திய தேசியக் கொடியில் காணப்படும் சின்னங்களையும், வர்ணங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட ஆடைகள், அண்மையில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் வைக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து அவ் ஆடையை பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன், ஆடைத் தயாரிப்பாளர் மீது தேசியக் கொடியை அவமதித்ததான குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இதேவேளை, தேசியக் கொடியை வர்த்தக நோக்கத்துக்காகப் பயன்படுத்துவதை தடை செய்யும் வகையில் இந்தியாவில் கடும் சட்டங்கள் நடைமுறையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. [உ]

# கிரிக்கெட் பந்தய சூதாட்டக்காரர் 8 பேர் கராச்சியில் பிடிபட்டனர்

(இஸ்லாமாபாத்)

சிங்கப்பூரில் நடந்துகொண்டிருக்கும் கிரிக்கெட் போட்டிக்காக பாகிஸ்தானில் பந்தய சூதாட்டம் நடத்தியவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை சிங்கப்பூரில் தென்ஆபிரிக்காவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நடந்த கிரிக்கெட் போட்டியின்போது பாகிஸ்தான் கராச்சியில் விடுதி ஒன்றில் பந்தயப் பேரம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்டபொழுது விடுதி உரிமையாளர் உட்பட எட்டுப் பேரைக் பொலிசாரால்கைது செய்யப்பட்டனர்.

அவ்விடத்தில் பேரம் சம்பந்தமான தகவல்களும் அயல்நாட்டு பேரக்காரர்களின் தொலைபேசி இலக்கங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. (து)

# எகிப்து வரும் அமெரிக்க அதிபர் மத்திய கிழக்கு பற்றிப் பேசுவார்

(வாஷிங்டன்)

இஸ்ரேலியருக்கும் பாலஸ்தீனியருக்கும் இடையே சமாதான உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த எகிப்திக்கு அமெரிக்க அதிபர் விஜயம் செய்கிறார்.

அடுத்த செவ்வாய்க்கிழமை எகிப்தின் தலைநகர் கெய்ரோவிற்கு செல்லவிருக்கும் அமெரிக்க அதிபர் பில் கிளிங்டன் இஸ்ரேல் பாலஸ்தீன சமாதானம்பற்றி அதிபர் ஹுஸ்னி முபாரக்குடன்பேச இருக்கிறார்.

அப்பேச்சின்போது இரு நாடுகளுக்கிடையேயும் மீண்டும் சமாதானப்பேச்சுக்களை ஏற்படுத்துவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்ற பிரச்சினைகள் குறித்தும் ஹுஸ்னி முபாரக்குடன் கிளிங்டன் பேச்சுக்கள் நடத்துவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. (து)

# ★ 60 வருடங்களுக்கு முந்திய விமானிகளின் சடலங்கள் மீட்பு ஐஸ்லாந்தில் சம்பவம்

(ஹக்ஜவிக்)

ஐஸ்லாந்தில் 60 வருடத்திற்கு முந்திய விமானிகளின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

1941 ஆம் ஆண்டு சிறிய ரக விமானம் ஒன்று 3000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கையில் புகார்க் கூட்டத்துக்குள் புகுந்ததென்றும் பின்பு அந்த விமானம் விபத்துக்குள்ளாகி விட்டதென்றும் அது பற்றிய மேலதிக தகவல்கள் இதுவரை தெரியாதிருந்ததென்றும் சொல்லப்படுகிறது.

இப்பொழுது பனி உறைவுகளுக்கு மத்தியில் கண்டுபிடிக்கப்பட்டது அந்த விமானத்தின் நான்கு விமானிகளின் உடல்கள் இருந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எடுக்கப்பட்ட இந்த விமானிகளின் உடல்கள் உறவினர்கள் மூலம் முறைப்படி அடக்கம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. (து)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடமைப்பு

(இணுவில்)

நியூமெடிக்கா நிறுவனத்தினர் உடுவில் ஆலடிப்பகுதியில், இடம்பெயர்ந்த மக்களுக்கென 80க்கு மேற்பட்ட வீடுகளை அமைத்துள்ளனர்.

குடிநீர், மற்றும் வாசிகசாலை சிறுவர் விளையாட்டு முற்றம் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள மேற்படி குடியிருப்பில், சம்பந்தப்பட்ட கிராமசேவையாளரின் சிபார்சுக் கடிதத்துடன் செல்லும் இடம்பெயர்ந்த குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். (உ)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

மக்களே போல்வர் கயவர் அவரன்ன ஒப்பாரி யாங் கண்டது இல்-

-குறள்

# வலம்புரி

## அடிக்கடி மிரட்டும் யுத்தப் பீதி

யுத்தப் பீதி யாழ். மக்களுக்கு கத்தரி வெருளியோ அல்லது பல நாளின் பின் ஒரு நாள் புறப்பட்ட ஓநாயா என்று விசனமுற வேண்டியிருக்கிறது. சத்தங்கள் செவிப்பறைக்கு அப்பியாசமாக விருந்தால் இருந்து விட்டுப் போகட்டும் எனலாம். உயிர் அறைக்கு சேதம் வந்தால் தான் உபத்திரவம். வாழ் நாளெல்லாம் பீதியின் மத்தியில் வாழ்ந்தால் இருக்குமிடம் இல்லயாக மாட்டாது. அது பல அங்கொண்டகளை தமிழ் மண்ணில் உருவாக்கி விடும். அத்தகையதொரு வாழ்வு வாழ்வாகாது.

நில்லாதன வற்றை நிலையின என்றுணரும் புல்லறிவு என்று பேயும் போயும் வள்ளுவன் இடித்துரைத்தானே அந்த வகையில் நிலையில்லாத வாழ்வு நிம்மதியில்லாத வாழ்வு வாழ்வாகாது தான். அவ்வாறெனில் ஏன் இந்த ஊன்பொதிந்த உடலைச்சுமந்து கொண்டு வாளாவிருக்க வேண்டும் என்ற ஈனக்குரல் எங்கும் ஒலிக்கிறது

கண்ணெல்லாம் கதிரையில் என்ற நிலை எப்போமாறும். காலம் காலமாக தீக்கொழுந்துபோல் சுடர் விடும் சுயநலம் தொலைந்த பாடில்லையே. இது மண்ணை விட்டு அகலும் போது தான் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள். பச்சைத் தண்ணியைக்

# திருமணங்கள் பலவிதம்; ஒவ்வொன்றும் ஒருவிதம்

# பொருத்தம் பார்ப்பது என்பது அவசியம் தானா?

ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள பந்தபாசத்தைத் திருமணம்என்ற சடங்கு தீர்த்து வைக்கிறது. பெரும்பான்மையினருக்கு திருமணம் முறைப்படி நடக்கிறது. சிலருக்கு காதல் திருமணம், கலப்புத் திருமணம், விதவா விவாகம், மறுமணம், சட்டயத் திருமணம் என்று பலவித திருமணங்களில் முடிகிறது.

ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு வித கிரக அமைப்பு இருக்கிறது. இவைகளெல்லாம் பூர்வ புண்ணியபலன்களால் அமையக்கூடியதாகும். அதற்காகத்தான் நம் முன்னோர்கள் திருமணத்திற்கான சட்டதிட்டங்கள் வகுத்து, அதைத் தசவிதத்திருமணப் பொருத்தம் என்று பெயர் சூட்டியுள்ளனர்.

முறைப்படித் திருமணப் பொருத்தத்தைத் தேர்ந்தெடுத்தாலும் அதை அடுத்து செவ்வாய் தோஷம் நாடிப் பொருத்தம், 2-7-8ம் இட அமைப்பு ஆகியவைகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, அதன் பிறகு ஆண் பெண் இரு ஜாதகங்களிலும், பொருத்தம் சரிவர அமைகிறதா? என்றும் பார்க்க வேண்டும் விவாகச் சக்கரப்படி முகூர்த்ததினம் யோகமாக இருக்கிறதா? என்று பார்க்க வேண்டும்.

பெண்களுக்கு எட்டாமிடம் மாங்கல்யஸ்தானம்என்பதால், அந்த இடம் கூடிய மட்டும் சுத்தமாகவும் சுபர்பார்வை, சுபர் சேர்க்கை உடையதாகவும் இருப்பது அவசியமாகும். பாபகிரகங்கள் இருப்பின் திருமணம் காலம் கடந்து நடைபெறும். உடன் பிரிவினையும் காட்டும்.

### அழகான பெண்கள்

சில பெண்கள் அழகே உருவத்துடன் திகழ்கின்றனர். சில பெண்கள், பார்ப்பதற்கு அழகற்ற தோற்றம் உடையவர்களாகவும் இருக்கிறார்கள். அழகுள்ள பெண்ணின் ஜெனன லக்கினம் ஜெனனராசி ஆகிய இரண்டும், ஜன்மராசி என்று சொல்லக்கூடியபெண்ராசியில் இடம் பெற்று இருக்கும். அத்துடன் அவ்விருஸ்தானங்களையும் சுபகிரகங்கள் பார்ப்பதும் அல்லது அவைகளில் இடம் பெற்று இருப்பதும் என்று இருக்கும். இந்நிலைமாறி

### ஏ. எம். பிள்ளை

ஆண்ராசிகள், பாபகிரகங்களின் பார்வை சேர்க்கைஎன்று இருந்தால், அவசியம் அப்பெண் அழகற்றவளாக இருப்பாள்.

பெண்களின் ஜெனன அல்லது ருதுஜாதகத்தில், மாங்கல்யஸ்தானமான எட்டாம் இல்லத்தில் நைசர்க்கபாபக் கிரகங்களான சனி-செவ்வாய்-ராகு இருந்தால் அந்த ஜாதகர்களுக்கு இலேசில்திருமணம் கூடாது. அப்படியேகூடினால், அது நீடித்த நல்வாழ்வாக இருக்காது. உடனுக்குடன் கணவன் மனைவியின் பிரிவினை காட்டும். ஒரு சிலருக்கு மறுமணமும் உண்டு. அந்த சணவரும் கூட நிலைத்து இருப்பது கடினம்.

### விவாகரத்து

ஆண்ஜாதகத்தில், களத்திர ஸ்தானமான ஏழாம் இல்லத்தில் மோட்சம்- ஞானக்காரகனான கேதுஇருப்பதுசரியல்ல. இப்படிப்பட்ட ஜாதகருக்குத் திருமணமான மூன்று அல்லது ஏழு ஆண்டுகள் வரையில் தான் கணவன், மனைவி உறவின் அன்னியோன்யம் நிலைத்து நிற்கும். அதற்குள் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் பிறந்து விடும். பிறகு கணவன் மனைவிக்குள் பிரிவினை ஏற்பட்டு, ஜீவனாம்சம் அல்லது விவாகரத்துக்கு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும்.

குடும்ப ஸ்தானமானஇரண்டாம் இல்லத்தில்ராகுதனித்து இருக்கப் பிறந்த ஜாதகர்களுக்கு இருதாரம் என்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. காலம் கடந்து திருமணம் செய்து கொண்டாலும், இத்தகைய காதல் வயப்பட்டு திருமணம் செய்து கொண்டாலும் பாதிப்பு ஓரளவு தவிர்க்கப்படுறது. இப்படிப்பட்ட ராகு சுபர் இல்லம்என்ற அமைப்பு பெற்று இருந்தாலும் கூட அது தீய சக்திக்குப் பலன் தராமல் போய் விடுகிறது.

இரண்டாம் இல்லத்தில், ஏழாமில்லத்தில், எட்டாம் இல்லத்தில், சூரியனும் சுக்கிரனும் கூடி இருந்தால், அந்த பெண்ணுக்கோ அல்லது பிள்ளைக்கோ திருமணம் எளிதில் நடைபெறுவது கிடையாது. பல முறை திருமணம் கூடியும் கலைந்தும் காலம் கடந்து திருமணம் நடைபெறும். பால்ய விவாகம் ஆயின் அது இருதாரம் என்ற வாய்ப்பை ஏற்படுத்தி விடுகிறது.

எட்டாமிடத்தில் குருஉள்ள ஆணுக்கு இருதாரம் ஏற்படுவது அனுபவத்தில் சாத்தியமாகி விடுகிறது. மதுப்பிரியர், மங்கைப் பிரியர், மாமிசப் பிரியர் என்ற குண சம்பந்தமும் ஏற்பட்டு விடுகிறது. ஒரு சிலர் வைராக்கிய விரதம் அனுஷ்டிப்பதும் உண்டு. ஆக எட்டாமிடகுரு நல்லதிலும் வேலை செய்கிறது. தீய வழிகளிலும் வேலை செய்கிறது.

### துறவற வாழ்வு

ஆண் அல்லது பெண் ஜாதகத்தில், இரண்டு, நான்கு, ஏழு, எட்டு, பத்து ஆகிய ஸ்தானங்களில் சூரியனுடன் இரண்டுக்கு மேற்பட்ட கிரகங்கள் கூடி அஸ்தங்கம் பெற்றால், அது சன்யாசியோகமுடைய ஜாதகமாக அமைந்து விடுகிறது. சில காலம், லௌகீக வாழ்க்கையும், மற்றுஞ் சிலகாலம், துறவற வாழ்க்கையும் ஏற்பட்டு விடுகிறது.

பெண்ணின் ஜெனன அல்லது ருது ஜாதகத்தில், 1,4,7 ஆம் அதிபதிகள் நீச்சமானாலும்சரி அல்லது, அந்த ஸ்தானங்களில் நீச்ச கிரகங்கள் இருந்தாலும் சரி, அப்பெண் எப்படியும், சமய சந்தர்ப்பவசத்தால், மானபங்கப்பட நேரிடும். நீச்சகிரகங்கள் நீச்சபங்கராஜ யோகம் பெற்றால், இதிலிருந்து விதிவிலக்கு உண்டு.

ஒரு ஆண் ஜாதகத்தில், சப்தம ஸ்தானமான ஏழாமிடத்தில், ராகு தனித்து இருந்தால், அவருடைய மனைவி நோய்வாய்ப்பட்டு பிராண அவஸ்தையைப் படுவார்.

இது ஒரு ரகம், வேறு ஒரு ரகம் எப்படி இருக்கும் என்றால், மனைவி தமது கணவரைத் தமது பிடிக்குள் கொண்டுவர, அவருக்கு மருந்திடுதல், மாந்திரிகம் செய்தல் போன்றவைகளில் துணிந்து இறங்குவாள் என்று சொல்லப்படுகிறது.

இரண்டு அல்லது எட்டில் சனி உள்ள ஜாதகர் ஆணாயினும் சரி அல்லது பெண்ணாயினும் சரி, அந்த ஜாதகர் அதிக அளவு இம்சை செய்யக் கூடியவராவார். இவரிடம் பணி செய்யக் கூடிய தொழிலாளிகளும் சரி, இவருக்கு வாழ்க்கைப் படுகின்ற மனைவியும் சரி, படாதபாடு படுவார்கள். அந்த அளவிற்கு இந்த ஜாதகர் கொடுமைக்காரராக இருப்பார். இறுதி வரையில், மற்றவர்களை இழித்துப் பேசியும், குறை கூறியும் வருவார். இதன் காரணமாக, இவரை இவருடைய நண்பர்கள் உறவினர்கள் வெறுக்கவே செய்வார்

## பரமபிதா காட்டிய பாதை

# அவலவாழ்வில் தொடரும் அழிவுகள்

## மனித மனத்தை அச்சுறுத்தும் மரணபயம்

நாகரிகம்தலைவிரித்தாடும் இந்த இருபத்தொராம் நூற்றாண்டில் விஞ்ஞான வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்ளும் நாம் உலகமே உள்ளங்கையில் வந்து சுருங்கி போட்டு எமது ஆழமான இறை விசுவாசத்தின் ஊடாக நிலை வாழ்வுக்கு அழைப்பு விடுகின்றார். "முடிவில்லாத வாழ்வு தருகின்ற வார்த்தைகள் உம்மிடம் தானே உள் விட்டு பிரிந்து வாழும்போது அவரின் அன்பின் முத்திரையாகிய நிலைவாழ்வை நாம் இழக்கின்றோம். இயேசுவின் அன்புக்கு அளவே இல்லை.

தொலைந்த பாடில்லையே. இது மண்ணை விட்டு அகலும் போது தான் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள். பச்சைத் தண்ணியைக் குடித்து விட்டாகுதல் மண் திண்ணையில் படுக்கலா மென்றால் முடிவதில்லையே. பிறந்த மண்ணின் சுகம் பெரிது தான். அதற்காக உயிரையே கொடையாகக் கொடுக்கும் காலத்தில் அது பற்றி பெரிதாக எதுவும் பேச வேண்டியதில்லைத்தான்.

செய்பவனும் எய்பவனும் ஏழை மக்களின் இன்னல் தோய்ந்த வாழ்வை எண்ணிப் பார்க்கட்டும். மாறாக வீராப்புக்கள் பேசி தேர்தல் களத்தில் குதித்துவிட்டு வந்த வேகத்தில் காற்றாய்ப் பறந்து மறைந்து விடக் கூடாது. மின்மினி போல் இடைசுக்கம் வந்து தலைகாட்டுவது தக்க அரசியலுமாகாது.

அன்புடன் ஆசிரியர்

நாகரிகம்தலைவிரித்தாடும் இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் விஞ்ஞான வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்ளும் நாம் உலகமே உள்ளங்கையில் வந்து சுருங்கி விட்டதாக மார்தட்டிக் கொள்ளுகின்றோம். அதே நேரம் மனித பண்பு மதிக்கப்படாமல், இறைவனால் படைக்கப்பட்ட பெருமதிமிக்க மானிட உயிர், விலை மதிப்பில்லாத ஒன்றாக கணிக்கப்பட்டு, அநியாயமாக பறிக்கப்படுவதை கண்கூடாகக் காண்கின்றோம். இன்றைய மனிதனின் வாழ்வில் மரணம் மனிதனை நோக்கி வேகமாக வருகின்றது.

திருமுழுக்கின் ஊடாக அழியா ஞான முத்திரையையும், இறைவனின் அருள் உயிரையும் பெற்றுக் கொண்ட நாம், உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ்ந்து, சமூகத்தில் நற்செய்திக்கு சான்று பகர முற்படும் போது இறைவனின் அருளை விளைவாகப் பெற்றுக் கொள்வதோடு, இறைமகன் கிறிஸ்துவில் நிறைவாழ்வையும் பெற்றுக் கொள்ள முடியும்.

''நானே உண்மையும் வழியும், வாழ்வும் என் வழியாய் அன்றி எவனும் நிலை வாழ்வைப் பெறமுடியாது'' என்று கூறிய இயேசு இன்றைய கால கட்டத்தில் நாம் அனுபவிக்கும் துன்ப, துயரங்கள், இழப்புக்கள் ஊடாக எம்மை புடம் போட்டு எமது ஆழமான இறை விசுவாசத்தின் ஊடாக நிலை வாழ்வுக்கு அழைப்பு விடுகின்றார். ''முடிவில்லாத வாழ்வு தருகின்ற வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன'' என்று கூறிய பேதுருவைப் போல நாமும் இறைமகன் கிறிஸ்துவை நாடி வாழ்வதற்கு முயற்சியெடுப்போம்.



கிறிஸ்துவின் அன்புக்கு இணையாக வேறொரு அன்பு இந்த உலகத்தில் கிடையாது. அன்பு செய்யும் ஒருவரை விட்டுப் பிரியும்போது நம்மை அன்பு செய்பவரிடம் இருந்து நமக்குக் கிடைக்கும் அன்பை இழக்கின்றோம். கிறிஸ்துவை அன்பு செய்யாது அவரை விட்டு பிரிந்து வாழும்போது அவரின் அன்பின் முத்திரையாகிய நிலைவாழ்வை நாம் இழக்கின்றோம். இயேசுவின் அன்புக்கு அளவே இல்லை. உயிரைக் கொடுத்து அவரது முடிவில்லாத வாழ்வைத் தரும் உடலையும், இரத்தத்தையும், நமக்கு உணவாகத் தந்துள்ளார்.

மனிதனின் வார்த்தைகள் பொய்யாகலாம் ஆனால் இயேசுவின் வார்த்தைகள் ஒருபோதும் பொய்த்ததும் இல்லை, பொய்யாய்ப்போவது இல்லை. முடிவில்லாத நிலைவாழ்வுக்கு ஏங்குகின்ற

## அமலரட்ணம்

மக்களாகவே நாம் வாழ்கின்றோம்.

ஏக்கம் தீர்க்க இயேசு நம் நடுவே நற்கருணை உருவிலே எழுந்து வரும்போது புனித பேதுருவைப் போல. ''இயேசுவே முடிவில்லாத வாழ்வு தரும் வள்ளலே நீரே என் ஆண்டவர் உம்மை உணவாக பெறுகின்றவர்கள் முடிவில்லா வாழ்வைப்பெறுவர்'' இதை நான் விசுவாசிக்கின்றேன் என்று நாம் ஒவ்வொருவரும் விசுவாச அறிக்கையிடுவோம். இந்த விசுவாசம் இயேசுவை விட்டு நாம் பிரிந்து செல்லாமல் நிலை வாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்லும்.

வரையில், மற்றவர்களை இழித்துப் பேசியும், குறை கூறியும் வருவார்; இதன் காரணமாக, இவரை இவருடைய நண்பர்கள் உறவினர்கள் வெறுக்கவே செய்வார்கள். இதே போல ஜாதக பொருத்தமுடைய பெண்ணைத் திருமணம் செய்து வைத்தால், அது பிரச்சினை தராது. (தொடரும்)

(சு)

14.08.2000 'வலம்புரி' யில் வெளியான தமிழ் மொழியும் இலக்கியமும் பகுதி 1 ற்கான விடைகள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 1 | 2) | 1 | 3) | 3 |
| 4) | 1 | 5) | 3 | 6) | 3 |
| 7) | 1 | 8) | 3 | 9) | 3 |
| 10) | 1 | 11) | 1 | 12) | 2 |
| 13) | 4 | 14) | 3 | 15) | 1 |
| 16) | 3 | 17) | 4 | 18) | 3 |
| 19) | 1 | 20) | 2 | 21) | 1 |
| 22) | 1 | 23) | 1 | 24) | 1 |
| 25) | 1 | 26) | 4 | 27) | 4 |
| 28) | 1 | 29) | 2 | 30) | 4 |
| 31) | 3 | 32) | 3 | 33) | 2 |
| 34) | 2 | 35) | 2 | | |

36) காலைக் காட்சி
37) கதிரவனின் ஒளிக்கதிர்
38) ஒளி பரந்த கடல் நீர்
39) இயற்கை
40) கிளை தோறும் கிளியின் கூட்டம்-காரணம் இயற்கை எழில் கொஞ்சும் பச்சை வர்ணம் கிளியிலும், தளிரிலும் தென்படுவதால்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# அமிர்தலிங்கத்திடமிருந்த ஆற்றல் தற்போது எவரிடமுமே இல்லை

## வரதராஜப்பெருமாள் கருத்து

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பாராளு மன்றத்தில் ஆணித்தரமாக எடுத்துக்கூறும் ஆற்றல் காலஞ்சென்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்திற்குப் பின்பு எவரிடமும் இருக்கவில்லை. இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சு. வரதராஜப் பெருமாள் தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ஈ. பி. ஆர். எல். எவ் இன் தலைமை அலுவலகத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் பேசும்போதே வரதராஜப்பெருமாள் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் அவர்கள் தமிழர்களின் பிரச்சினைகளை ஆணித்தரமாக பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறியவர். இதனால் எமது பிரச்சினைகள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்தது.

ஆனால் இன்று தமிழர்களின் பிரச்சினைகளை எடுத்துக்கூறும் ஆற்றல் எவருக்குமே இல்லை என்றும் குறிப்பிட்டார்.

இப் பத்திரிகையாளர் மாநாட்டில் ஈ. பி. ஆர். எல். எவ். இன் பிரமுகர் சுபத்திரனும் கலந்து கொண்டார். (ந)

## ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

நேற்றிரவு 11-30 மணியளவில் யாழ். நகரப் பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. இதனால் அப்பகுதிகள் அதிர்ந்த வண்ணமிருந்தது.

இதேவேளை இச் ஷெல் வீச்சினால் ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் தெரியவரவில்லை. (ந - 7)

## யாழ். சிறைச்சாலையில் தண்ணீர் பெரும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் போதிய நீர் வசதியின்றி அங்குள்ள கைதிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத்தெரியவருகிறது.

கைதிகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதனால் குடிப்பதற்கும் பிற தேவைகளுக்கும் வேண்டிய நீரைப் பெறமுடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இது குறித்து யாழ். சிறைச்சாலை அதிகாரிகள் யாழ். மாநகரசபையுடன் தொடர்பு கொண்டபோது குடி நீரை பவுசர் மூலம் வழங்குவதற்கு மாநகரசபை முன்வந்துள்ளதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-12)

## பொ. ஐ. மு...

குலநாயகம், பொறியியலாளர் ஜெயக்குமார், உட்பட சட்டத்தரணி ஒருவரும், பெண்வேட்பாளர் ஒருவரும் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பொதுத்தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணி இலங்கை பூராகவும் போட்டியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ந)

## ஜனாதிபதி...

சாலைகள் அமைச்சர்பௌஸியின் அறிக்கை தொடர்பாக அரசுக்கும். முஸ்லிம்காங்கிரசிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை நீடிக்க விடாமல் அதனை முடிவுக்கு கொண்டுவருவதற்குஜனாதிபதிநடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்நடவடிக்கையில் முதல் கட்டமாகவே இன்று ஜனாதிபதி அஸ்ரப் சந்திப்பு நேரடியாக இடம்பெறவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் பொதுத்தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டி இடவேண்டும் என்றும் கட்சியில் உள்ள ஒரு சாராரும், பொதுஜனஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டிஇடவேண்டும் என்று இன்னுமொருசாராரும் கூறி வருவது குறிப்பிடத்தக்கதாகும். (வ)

## தேர்தலில்...

விபரம் மிகவும் இரகசியமாக வைத்திருப்பதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## இலங்கை...

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சபாநாயகர் தொடர்ந்து பேசுகையில்.

இந்நாட்டில் வாழுகின்ற சிறுபான்மை மக்களுக்கு பிரச்சினைகள் இருப்பது என்பது உண்மைதான் இப்பிரச்சினைகளை பேச்சு வார்த்தை மூலம் தீர்த்து வைக்க வேண்டும்.

விளையாட்டு மைதானத்தைப் பொறுத்தமட்டில் இன,மத, பேதங்களை மறந்து ஒன்று கூடும் இடமாக அது விளங்குகிறது. இந்த மைதானத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் குழுமி இருக்கும் காட்சி இனஒற்றுமையை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

நான்வடமராட்சியில்உள்ள ஹாட்லிக்கல்லூரியில் கல்வி கற்றேன் எனது இந்த உன்னத நிலைக்கு அக்கல்லூரியே காரணம் இக்கல்லூரியின் கிரிக்கெட், உதைபந்தாட்ட அணிகளுக்கு நான் தலைமைதாங்கி உள்ளேன் என்று கூறினார்.

சபாநாயகர் இக்கூட்டத்தில் தமிழில் உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## மீண்டும் பஸ் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக்கான பஸ் சேவை எதிர்வரும் 1ஆம்திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடபகுதி போக்குவரத்துச் சபையினருடன் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மதனராஜன் (மனோ) தொடர்பு கொண்டதை அடுத்தே இச்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந)

## சுபத்திரன்...

இமானுவல் சில்வாவும், திருமலை மாவட்டத்தில்அன்ரனி நிக்லைஸ், மட்டக்களப்பு மாவட்டத்தில் இரா. துரைரெட்னமும் தலைமை வேட்பாளராகப் போட்டியிடவுள்ளதாகவும், தான் யாழ். மாவட்ட வேட்பாளர் பட்டியலில் இடம் பெறுவதாகவும், அம்பாறை மாவட்ட வேட்பாளர் குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

இதே வேளை வடக்குக் கிழக்குக்கு வெளியே போட்டியிடும் நோக்கம் தமக்கு இல்லை எனவும் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் தற்போது இடம் பெற்று வரும் பேச்சுக்களின் தீர்க்கமான முடிவு எட்டப்படும் பட்சத்தில் வடக்குக் கிழக்குக்கு வெளியில் போட்டியிடுவது பற்றிபரிசீலிக்கலாம் எனவும் வரதராஜப்பெருமாள் மேலும்தெரிவித்தார். (ந-3)

## கொழும்பு...

வர்கள் கருத்துத் தெரிவிக்கையில்மேலும் கூறியதாவது.

யாழ்ப்பாணத்துக்கு நாம் செல்ல வேண்டியிருந்தால் அதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்படவேண்டும் இவ் அனுமதியைப் பெறுவதில் நாம் பலசிரமங்களை எதிர்நோக்குகின்றோம்.

யாழ்ப்பாணத்துக்கான பயணிகள் சேவையில் ஈடுபட்டுள்ள திருமலை நகரம் கப்பலில் தமிழ் அரசியல் குழுக்கள் பிரயாணம் செய்வதற்கு செஞ்சிலுவைச் சங்கமும் பாதுகாப்பு அமைச்சும் அனுமதி தரமறுத்து வருவதனால் யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரசார வேலைகளில் எப்படி ஈடுபடுவது என ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஸ் அணியை சேர்ந்த சுரேஸ் பிறேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்

இதே வேளை யாழ்ப்பாணத்து மக்கள் கடந்த பல வருடங்களாக கொழும்பு செல்வதில் பல்வேறு கஷ்ரங்களை எதிர் நோக்கிவருவதை தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் அறிவார்கள் என்பது தெளிவாகிறது என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய தொன்றாகும். (வ)

## ...த்து...

யோரும் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

ஈ. பி. டி. பி. அமைப்பைச் சேர்ந்த முன்னாள் யாழ். மாவட்ட எம்.பியும், அதன் செயலதிபருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் அக்கட்சியின் முன்னாள் எம்.பிக்களும் ஏற்கனவே யாழ்ப்பாணம்வந்து தங்கியுள்ளனர்.

ஈ. பி. ஆர். எல். எவ். இன் வரதர் அணித் தலைவர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர். முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தற்பொழுது யாழ். நகரில் தங்கியிருந்து வேட்பாளர் தெரிவில் ஈடுபட்டுள்ளார்.

ஈ. பி. ஆர். எல். எவ். சுரேஷ் அணியினரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ தலைவர்களும் நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரெலோ அமைப்பின் தலைவரும் சட்டத்தரணியுமான ந. சிறிகாந்தா தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளதாக ரெலோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில், கல்விமான்கள், முன்னாள் கல்லூரி அதிபர்கள், சமூக சேவையாளர்கள் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் திருவிழா அமர்க்களம் இவ்வாறிருக்க யாழ் குடாநாட்டு மக்கள் அடுத்தது என்ன நடக்கப்போகிறது என்பதை அறியும் ஆர்வமுடையவர்களாகக் காணப்படுகிறார்கள்.

யாழ். நகரில் இருந்து தினமும் பெருந்தொகையான மக்கள் தமது வீடுகளை பாடல்களை... கொண்டு வலிகாமம் பகுதியை நோக்கி...

ராஜா
யாழ்ப்பாணம்

ஸ்ரீ செல்வா
[யாழ்ப்பாணம்]
சரத்குமார் - மீனா

கஜன்
திரை
ஊர்காவற்றுறை

நாகம்ஸ்

யாழ்ப்பாணம்

நவரசநாயகன் கார்த்திக்
கௌசல்யா
அப்பாஸ் ராதாரவி
நடித்த

**பூவேலி**

10.30, 2.00 [பு:நே]
(இ/787)

[யாழ்ப்பாணம்]

சரத்குமார் – மீனா
நடித்த

**மாயி**

CD புதிய பிரதி
காட்சி நேரம்
10-30, 2-00 (பு:நே)
[இ 688]

ஊர்காவற்றுறை

கார்த்திக், ரேவதி
ஜனகராஜ், குஷ்பு
நடிப்பில்

**கிழக்கு வாசல்**

காட்சி நேரம்
பி.ப 3.30 மணி
(இ658)

**நாகம்ஸ்**

(சுன்னாகம்)

அஜித்குமார், ஷாலினி
இணையும்

**அமர்க்களம்**

(ரீகல்)
11; 00 – 2: 30 பு:நே
(இ.739)



மக்கள் தமது வீட்டுத்தள பாடங்களை ஏற்றிக்கொண்டு வலிகாமம் பகுதியை நோக்கி செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

தேர்தலையொட்டிய கண்காணிப்பு நடவடிக்கையாக தீவிர ரோந்துப்பணிகள் யாழ் நகரில் அதிகரித்துள்ளதாகவும் பிரதான வீதிகளில் திடீர் சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ


அம்மணியை அம்பலப்படுத்தியது
செம்மணி!
அவலங்கள் போக்கிடவே
ஆதரிப்பீர்,

# ஈழமக்கள் ஜனநாயக கட்சியை!
# ( ஈ. பி. டி. பி )

வீணையே உங்கள்சின்னம்! சேவையே எங்கள்எண்ணம்!!



X

1999ம் ஆண்டு யாழ். மாவட்ட அபிவிருத்திக்கென
(இ/736) ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களது நிதியில் இருந்து 220 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.



இப்பத்திரிகை "வலம்புரி" [illegible] இல: 15, [illegible] யாழ்ப்பாணம் [illegible]
[illegible] 2000 [illegible] 27 [illegible]